செய்தி வெளியீடு எண்: 443 நாள்: 03.08.2009

கோ–ஆப்டெக்ஸின்

# டிசைனர் கலெக்ஷன்

பவள விழா ஆண்டு
2009 - 2010

## பத்திரிக்கை குறிப்பு

கைத்தறி துறையின் பாரம்பரியத்திற்கு எடுத்துக்காட்டாக, இந்திய ஜவுளித் துறையில் தனக்கென்று ஒரு தனி இடத்தை நிலைநாட்டியுள்ள கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், 1935 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 75 ஆண்டுகளாக சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது. 2009–10 ஆம் ஆண்டை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது பவள விழா ஆண்டாகக் கொண்டாடி வருகிறது.

மாறிவரும் சந்தை நிலவரத்திற்கும், வாடிக்கையாளர்களின் இரசனை மற்றும் அவர்களது தேவைகளின் அடிப்படையிலும், கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்வதற்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் வடிவமைப்பாளர்களை நியமித்து, ஒவ்வொரு வடிவமைப்பாளர்களுக்கும் ஒவ்வொரு நெசவு பகுதிகளைப் பகிர்ந்து அளித்து, அந்தந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களின் புதிய வடிவமைப்புகளை வண்ணக் கலவைகளில் அறிமுகப்படுத்தி, அவ்வாறு தயார் செய்யப்பட்ட கைத்தறி இரகங்களை மாதந்தோறும் நடத்தப்படும் கண்காட்சியின் மூலம் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து வருகிறது. இதன்மூலம், வாடிக்கையாளர்களின் பேராதரவும், நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. கடந்த 2 ஆண்டுகளாக இந்த முயற்சியின் விளைவாக, கோ–ஆப்டெக்ஸின் விற்பனை, 2008–09 ஆம் ஆண்டில், விற்பனைக் குறியீடான ரூ.150.00 கோடியைக் கடந்து ரூ.150.40 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

இந்த முயற்சி நடப்பாண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, ஏப்ரல் 09 மற்றும் ஜுன் 09 மாதங்களில், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள வானவில் விற்பனை நிலையத்திலும், தி.நகரிலுள்ள சர்.பிட்டி விற்பனை நிலையத்திலும் "சித்திரை பருத்தி சேலை" கண்காட்சியும், இளம் வயதினரைக் கவரும் வண்ணம் "யுவா மற்றும் இழை" தொகுப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட ஆயத்த ஆடைகள் கண்காட்சியும், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியது. இத்தகைய முயற்சியின் காரணமாக நடப்பாண்டில் ஏப்ரல் 09 மாதம் முதல் ஜுன் 09 மாதம் வரையிலான விற்பனை ரூ.25.04 கோடி அளவிற்கு நடைபெற்றுள்ளது. கடந்த ஆண்டு, இதே காலகட்டத்தில் விற்பனையான ரூ.15.45 கோடியை விட இந்த ஆண்டு விற்பனை 62 சதவிகிதம் உயர்வடைந்துள்ளது.

இந்த பவள விழா ஆண்டில், புதிய சாதனையை படைக்கும் நோக்கத்துடன், விற்பனைக் குறியீடாக ரூ.200 கோடி நிர்ணயிக்கப்பட்டு, இந்த விற்பனையை அடைவதற்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. சென்னையில் மட்டுமல்லாது, இந்தியா முழுவதும் உள்ள கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் மாதந்தோறும் கண்காட்சிகள் நடத்தப்பட்டு, புதிய இரகங்களை அறிமுகப்படுத்தி, விற்பனையைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆடிப்பெருக்கை முன்னிட்டு இன்றைய தேதியிலிருந்து 15 நாட்களுக்கு தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகையில் நடைபெறும் "டிசைனர் கலக்ஷன்" கண்காட்சியில் பருத்தி, பட்டு பருத்தி மற்றும் கலப்பிழை நூலினால் தயார் செய்யப்பட்ட புதிய வடிவமைப்புகளை நவீன வண்ணக் கலவையில் தொகுத்து வழங்கப்படுகிறது. மேலும் தமிழகத்திலுள்ள முக்கிய விற்பனை நிலையங்களிலும் இந்த கண்காட்சி நடத்தப்பட உள்ளது.

இந்த கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பருத்தி சேலைகள் தமிழகத்தில் உள்ள நெசவாளர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு வெளியிடப்பட்டுள்ளது. இந்த பருத்தி சேலைகளின் தொகுப்பு கோவை பகுதியில் உள்ள சிறுமுகை, திருப்பூர், ஒண்டிப்புதூர் மற்றும் சிறுமுகை நெசவு மையங்களில் உருவாக்கப்பட்ட 30 வடிவமைப்புகளும், ஜெயங்கொண்டம், உறையூர் பகுதிகளில் உருவாக்கப்பட்ட 40 வடிவமைப்புகளும் சேலம் மாவட்டத்திலுள்ள தோப்பூர், வனவாசி, தாரமங்கலம் பகுதிகளில் உருவாக்கப்பட்ட 60 வடிவமைப்புகளும், பரமக்குடி, அருப்புக்கோட்டை, சின்னாளப்பட்டி, திண்டுக்கல் பகுதிகளில் உருவாக்கப்பட்ட 60 வடிவமைப்புகளும், சோழிங்கர் மற்றும் ஆரணி பகுதிகளில் உருவாக்கப்பட்ட 10 வடிவமைப்புகளும், மொத்தமாக 200 வடிவமைப்புகளில் உருவாக்கப்பட்ட பல்வேறு கண்ணைக்கவரும் வண்ணக் கலவையில் உற்பத்தி செய்யப்பட்டு இந்த கண்காட்சியின் மூலம் விற்பனைக்கு வெளியிடப்படுகிறது. அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களும் வாங்கும் வண்ணம் இந்த சேலைகளின் விலை ரூ.300 முதல் ரூ.1500/– வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3.8.2009 அன்று மாலை 5.00 மணி அளவில், சென்னை, எழும்பூர், 350, பாந்தியன் சாலையில் அமைந்துள்ள கோ–ஆப்டெக்ஸ் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை விற்பனை நிலையத்தில் "கோ–ஆப்டெக்ஸின் டிசைனர் கலக்ஷன்" கண்காட்சி மற்றும் விற்பனையை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் **திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப.** அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்த விழாவிற்கு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் முதன்மைச் செயலர், திரு.ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்தார்கள். கோ–ஆப்டெக்ஸின் தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.வெ.சந்திரசேகரன், இ.ஆ.ப. அவர்கள் இவ்விழாவிற்பான ஏற்பாடுகளை சிறப்புற செய்தார்கள். இக்கண்காட்சியில் அரசு துறையின் உயர் அதிகாரிகள் மற்றும் கோ–ஆப்டெக்ஸின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டார்கள்.

*****

## “தங்க கோபுரம்” தூய பட்டு ஜரிகை காஞ்சிபுரம் சேலை

கைத்தறி நெசவாளர்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தனித் தன்மை வாய்ந்த கைத்தறி சேலைகளை உற்பத்தி செய்வதில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியின் பயனாக ஏற்கனவே, மயில் தோகை பட்டு சேலை, மேஜிக் பட்டு சேலை, ராயல் அடுக்குத் துகில் பட்டு சேலை, சுடர்க்கொடி பட்டு சேலை, வானவில் பட்டு சேலை, திருக்குறள் பட்டு சேலை, செம்மொழி பட்டு சேலை, மகாத்மா காந்தி பட்டு திரைச் சீலை, மிளிரும் பூக்கள் பட்டு சேலை ஆகிய சேலைகளை கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி உள்ளது. அதன் தொடர்ச்சியாக இன்று “தங்க கோபுரம்” தூய பட்டு ஜரிகை காஞ்சிபுரம் சேலை அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த சேலையின் சிறப்பம்சம், உடுத்தியபின் பெண்களின் உட்சொருகல், கொசுவம், மாராப்பு, முந்தானை மற்றும் இரவிக்கை என ஐந்து பகுதிகளையும், ஐந்து விதமான தனித்தனி டிசைன்களில் அலங்கரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் முந்தியில், சிறப்பு அம்சமாக, தங்க மீன்கள் வடிவமைக்கப்பட்டிருக்கும். மீன்களின் வயிற்றில் ஒரு சிறப்பு “வலை நெசவு” முறையில் முத்துக்கள் பதிக்கப்பட்டிருக்கும். காஞ்சிபுரம் பட்டு நெசவு முறையில், இந்த நெசவு முதன்முறையாக இடம் பெறுகிறது.

மேலும் காஞ்சிபுரம் பட்டு இரகங்களில், மிகப் பழமையான இரகங்களில் ஒன்றாகிய “தங்க கோபுரம்” என்ற இரகத்தை தழுவி இந்த சேலையின் உடல் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே இதற்கு “தங்க கோபுரம்” என பெயர் சூட்டி வெளியிடப்பட்டுள்ளது.

இதில் 401 கிராம் தூய பட்டும், 569 கிராம் தூய சரிகையும் உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த சேலையின் நிகர விலை ரூ.35,000/– ஆகும்.

இந்த சேலையை, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் இன்று வெளியிட்டார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

THANGAGOPURAMSSAREE-R